Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.490/2025

Deposition of witness for the PW 2
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on

| | | | |
|---|---|---|---|
| Name | : கணேசன் | Village | : |
| Father's / Husband's Name | : செந்தட்டி | Calling | : |
| Age | : | Taluk | : |

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது டி7-டேங்க் பேக்டரி காவல் நிலைய குற்ற பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகின்றேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் இதே காவல் நிலையத்தில் தான் பணிபுரிந்து வந்தேன். கடந்த 01.03.2024 அன்று இரவு 9 மணிக்கு நானும் தலைமை காவலர் சந்திரசேகரும் இரவு பணிக்கு நிலையத்தில் அஜர் ஆனோம். பிறகு அதிகாலை 4.30 மணிக்கு ஆர்ச் அந்தோணி நகரில் இருக்கும்பொழுது எதிரே ஒரு பொலிரோ வண்டி ஸ்பீடாக வந்தது. அதனை நாங்கள் தடுத்து நிறுத்தினோம். அந்த வண்டி நிற்கவில்லை. எங்களை தாண்டி 100 மீட்டர் தூரத்தில் ஸ்பிடு பிரேக்கில் வண்டி நின்றுவிட்டது. அதன்பிறகு நாங்கள் பின்னாடியே சந்திரசேகரனின் இரு சக்கர வாகனத்தில் சென்றோம். பொலிரோ பக்கத்திலேயே எங்கள் வண்டியை நிறுத்தினோம். பொலிரோவில் யார் இருக்கின்றார்கள் என்று கேட்டோம். அப்போது ஆஜர் எதிரி விஸ்வநாதன் இன்று வெள்ளை கலர் சட்டை போட்டு நிற்பவர். வண்டியை திறந்து பெரிய கத்தியை எடுத்து எங்கள் இருவரையும் உங்களை வெட்டி சாகடித்து விடுவேன் என்று கூறி அசிங்கமாக திட்டினார்.

தேவிடியா பையா என்று திட்டினார். அதன்பிறகு கூட இருக்கின்ற அருணும் 2 பேரும் சேர்ந்து சந்திரசேகரின் டுவிலர் அருகே வந்தார்கள். வண்டியை எடுக்கப் பார்த்தார்கள். அதனை நாங்கள் தடுத்தோம். அப்பொழுது உங்கள் இருவரையும் வெட்டி சாகடித்து விடுவோம் என்று கூறிவிட்டு டுவிலரை எடுத்துச் சென்றுவிட்டார்கள். அவர்கள் ஆஜர் எதிரிகள் தான் அன்றைய தினம் வண்டியை எடுத்துச்சென்றவர்கள். சந்திரசேகர் போலிசில் புகார் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்துக்கொண்டார். அதன்பிறகு 07.03.2024 அன்று ஸ்டேசனுக்கு வந்தபொழுது 5 பேர்கள் இருந்தார்கள். அவர்களில் இன்று ஆஜராகியிருக்கும் எதிரிகள் 2 பேரையும் அடையாளம் காட்டினேன். அன்றைய தினம் ஆய்வாளர் என்னை விசாரித்துக் கொண்டாார்.

<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை ஒரு முறை விசாரித்தார். அன்றைய தினம் நைட் ரவுண்ட்ஸ் ஆபிசராக சுகுணா மேடம் பணியில் இருந்தார். பொதுவாக ரோந்து பணியில் ஏதாவது நடந்தால் ரேஞ்ச் ஆபிசருக்கு தான் முதலில் தகவல் சொல்ல வேண்டும். நானும் சந்திரசேகரும் சுகுணா மேடத்திற்கு தகவல் சொன்னோம். இவ்வாறு தகவல் சொன்ன விசயத்தை எங்களது இன்ஸ்பெக்டரிடம் சொன்னோம். அவ்வாறு தகவல் எதுவும் நான் சொல்லவில்லை என்றாலும் அவ்வாறு சொல்லியிருந்தால் அதனனை நான் கொடுத்த 163 வாக்கு மூலத்தில் சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இரு சக்கர வாகனம், நான்கு சக்கர வாகனத்தை எங்கு வைத்து எந்த தேதியில் யார் கைப்பற்றினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரிகளை கைது செய்த பொழுது இன்ஸ்பெக்டர் தான் இவர்கள் தான் அவர்கள் என்று அடையாளம் காட்டினார் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை சம்பவத்திற்கு முன்பாக நான் பார்த்தது கிடையாது. இன்ஸ்பெக்டர் சொல்லிதான் எதிரிகளை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தபொழுது அவர்களின் அங்க அடையாளங்களை அதாவது உயரமாக இருந்தார்களா, குட்டையாக இருந்தார்களா, ஒல்லியாக இருந்தார்களா, பருமனாக இருந்தார்களா என்ற விவரத்தை சொல்லியிருக்கிறேன். நான் பணியில் இருந்ததை காட்டக்கூடிய

பாக்கெட் டைரியை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தீர்களா என்றால் எல்லாம் அந்த வண்டியில் இருந்தது. வண்டியோடு சேர்த்து எடுத்துச் சென்றுவிட்டார்கள். ஆர்ச் அந்தோணி நகர் காட்டூர் செல்லும் வழியில் இருக்கின்றது. அங்கு ஸ்பீடு பிரேக் இருந்ததா என்றால் ஆமாம். அந்த ரோடு சர்வீஸ் ரோடு என்பதால் யாரும் வேகமாக வரமுடியாது என்றால் சரியல்ல. எதிரிகள் வண்டி வேகமாக வந்தது. சந்திர சேகர் புகார் கொடுத்தபொழுது தியாகராஜன் சார் தான் இன்ஸ்பெக்டர். நான் அவருக்கு கீழே தான் பணி செய்து வருகின்றேன். இந்த வழக்கில் ஆஜர் எதிரிகள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழாக நடவடிக்கை எடுத்த விவரம் எனக்கு தெரியாது. நான் சொல்வதை போல சம்பவ நடந்த தினத்தன்று எந்த ரோந்து பணிக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு சென்றிருந்தால் அந்த ஆவணங்களை ஒப்படைத்திருப்பேன் என்றாலும் அவ்வாறு செல்லாததால் தான் ஆவணங்கள் எதனையும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் சொன்னதை போல இரவு ரோந்து செல்லாததால் தான் வாகனம் எப்பொழுது கைப்பற்றப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தியாகராஜன் கேட்டுக்கொண்டதற்கிணங்க பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. இன்ஸ்பெக்டர் சொன்னதன் பேரில் தான் எதிரிகளை நீதிமன்றத்தில் அடையாளம் காண்பிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**